# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1976 - 2016 ජූලි මස 15 වැනි සිකුරාදා - 2016.07.15

*1976 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1154 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1161 |


**கவனிக்க.**- சட்ட ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம் 2016, மே மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, ஓகத்து 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, யூலை மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஆவணி மாதம் 15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூன் 22.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | குச்சவெளி | கட்டுக்குளம் வடக்குப் பிரிவில் விவாகப் (தமிழ்) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |
| திருகோணமலை | கிண்ணியா | குறிஞ்சான்கேணி பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு (தமிழ்) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |

7-581

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஆவணி மாதம் 15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூன் 29.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | வலல்லாவிட்ட | மாகளன்தாவ பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் மேற்கு பஸ்துன் கோறளைப் பிரிவில் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |

7-713

## இலங்கை நிரந்தர வான்படை

பயிலிளவல் ஆண்/ பெண் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழ்வரும் பிரிவுகளில் பயிலிளவல் ஆண்/ பெண் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் உள்ளன.

(அ) தொழில்நுட்ப பொறியியல் பிரிவு (ஆண்/ பெண்)
(ஆ) இலத்திரனியல் பொறியியல் பிரிவு (ஆண்)
(இ) உபகரணப் பிரிவு (ஆண்/ பெண்)
(ஈ) நிருவாக பிரிவு (ஆண்/ பெண்)
(உ) நிருவாக ரெஜிமன்ட் பிரிவு (ஆண்/ பெண்)
(ஊ) வான் வழி நடத்துனர் பிரிவு/ ATC (ஆண்)

2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண்/ பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

**BSc. (Aviation Studies) *பட்டப் பயிற்சிக்கு உட்செல்வதற்கான தகைமை (ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவலை பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட)***

***தொழில்நுட்ப பொறியியல் பிரிவு/இலத்திரனியல் பொறியியல் பிரிவுகள் :***

குறைந்தபட்சம் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக பிரிவில் பௌதீகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம்) (தேவையைப் பொருத்து) மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

***உபகரணப் பிரிவு/ நிருவாகப் பிரிவு/ நிருவாக ரெஜிமன்ட் பிரிவுகள் :***

குறைந்த பட்சம் க. பொ. த. (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக/ உயிரியல்/ வர்த்தக/ தொழில்நுட்பப் பிரிவுகளில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மேலும் கலைப்பிரிவு மாணவர்கள் குறைந்தபட்சம் க. பொ. த. (உ. த.) மூன்று பாடங்கள் சித்திபெற்றிருப்பின் நிருவாக ரெஜிமன்ட் பிரிவிற்கு விண்ணப்பிக்கலாம்.

***வான்வழி நடத்துனர் பிரிவு/ ATC :***

குறைந்த பட்சம் க. பொ. த. (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக (பௌதீகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம்)/ உயிரியல் (பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல்) பிரிவுகளில் (தேவையைப் பொருத்து) மூன்று பாடங்கள் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

3. **வேறு தகைமைகள்**.- இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாக பூர்த்திசெய்தல் வேண்டும் :-

(அ) *தேசிய இனம் :-* ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) *வயது :-* 2016, நவெம்பர் 15 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) *உயரம் :-*
ஆண்- 5 அடி 6 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும் ;
பெண்- 5 அடி 4 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.

(ஈ) *உடல் நிறை :-*
ஆண் 17 $<$ உடற்பருமன் சுட்டி (BMI) $<$ 26
பெண் 17 $<$ உடற்பருமன் சுட்டி (BMI) $<$ 25

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் (மீ)}^2}$$

(உ) *மார்பு :-* ஆண் 32" (குறைந்தது)

(ஊ) *பார்வை வர்ணப்பதிவு மட்டம் :-* CP2

(எ) *தொலை பார்வை :-* இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(ஏ) *குடியியல் நிலை :-* விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலிளவல் எவரும் பயிற்சியின்போதும் ஆணைபெற்ற திகதியிலிருந்து ஓராண்டு காலத்துக்கும் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள சாதனைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. இரண்டாம் மூன்றாம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை மட்டம் ஆகியவற்றிற்கு குறைவானவர்களும் உடற்தகைமை மட்டத்தை கொண்டிராதவர்களும் நேர்முகப்

பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். தேவையான உயரம் இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்**.- (அ) தேர்வுநாடி தொடக்கத்தில் ஏனைய பதவி வரிசைகளுக்குப் போன்ற அதே விதத்தில் வான்படையில் ஒரு பயிலிளவலாகச் சேர்க்கப்பட்டு அடிப்படை யுத்தப் பயிற்சியொன்றை மேற்கொள்வர். அடிப்படை பயிற்சி திருப்திகரமாக முடிவடைந்ததும் மற்றைய பயிற்சிக்கான காலப்பகுதி பயிலிளவல் சேவையின் கிளையைப் பொருத்து இருக்கும். பின் ஏனைய பதவி வரிசையிலான ஆட்சேர்ப்பு நீக்கப்பட்டு பைலட் ஒபிசர் பதவி வரிசையில் நிரந்தர ஆணையொன்றை பெறுவர்.

(ஆ) பயிலிளவல் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனை யுடன் வான்படை ஏவுநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

(இ) பயிலிளவல்களாகப் பயிற்சி பெறும் காலப்பகுதி யின்போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

(ஈ) ஒவ்வொரு பயிலிளவலுக்கும் அனைத்து வகை சீருடைகள், உபகரணங்கள், மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

(உ) பயிலிளவலின் பயிற்சிக் காலத்தின்போது பயிலிளவலுக்கு வான்படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்டு உணவும் வழங்கப்படும்.

(ஊ) ஒரு பயிலிளவல் பயிற்சியின்போது ஆணையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய பயிலிளவலின் பொருட்டு அதுகாலவரையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

(எ) ஒரு பயிலிளவல் தமது பயிற்சியின்போது எச்சம யத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கைக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கைக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின் சார்பில் வான்படை ஏவுநருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும்படியும் தேவைப்படுத்தப்படுவர்.

(ஏ) பெற்றோர் அல்லது பாதுகாவலர் உப்பந்திகள் ஊ, எ தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 27 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத்தேர்வுநாடிகள் பயிலிளவல் களாக நியமிக்கப்படுவதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப் படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(ஐ) பந்தி 02 இலும் 03 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வுநாடிகள் முதலாவது நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெறுபவர்கள் அலுவலர் தரப் பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். அலுவலர் தரப்பரீட்சையில் சித்திபெறும் தேர்வுநாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் அழைக்கப்படுவர். (எல்லா தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகளும் இலங்கை வான்படையின் ஏற்பாடுகளின்கீழ் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.) இப்பரிசோதனைகளில் சித்தி பெறுவோர் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஒவ்வொரு கிளைகளுக்கும் தேவைப்படும் தேர்வுநாடிகளின் எண்ணிக்கை அவரவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

(ஒ) திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவு ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

(ஓ) திருமணமாகிய அலுவலராயின் (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவை யாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்.

(ஔ) எல்லா அலுவலருக்கும் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப் படுவதற்கு ஆளாவர்.

(அஅ) எல்லா அலுவலருக்கும் வான் படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக் கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கைக் குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப் பெற்ற அல்லது இதன் பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

*8. சம்பளமும் கொடுப்பனவுகளும்.- (அ) இலங்கை வான் படையில் பயிலுனர்களுக்கும் ஆணைபெற்ற அலுவலர் களுக்குமான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) -*

*பயிலிளவல் : ரூபா 1,87,620*
*பைலட் ஆபீசர் : ரூபா 2,23,500 (பயிலிளவல் நுழைவு)*
*பைலட் ஆபீசர் : ரூபா 2,42,700 (பயிலிளவல் அல்லாத நுழைவு)*
*பிளையிங் ஆபீசர் : ரூபா 2,75,220 – 34 x 7,740 - ரூபா 5,38,380*
*ப்ளையிட் லெப்டினனட் : ரூபா 3,21,660 – 28 x 7,740 - ரூபா 5,38,380*
*ஸ்குவாட்ரன் லீடர் : ரூபா 3,52,620 – 24 x 7,740 - ரூபா 5,38,380*
*விங் கமாண்டர் : ரூபா 3,62,100 – 20 x 9,480 - ரூபா 5,51,700*
*குறூப் கப்ரின் : ரூபா 4,41,060 – 18 x 12,600 - ரூபா 6,67,860*

(ஆ) ***ஏனைய கொடுப்பனவுகள்.-***

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800.

(2) உற்சாகமூட்டும் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் வழங்கப்படும்.

(3) கடினப்படி : மாதமொன்றுக்கு ரூபா 600.

(4) விசேட கொடுப்பனவு : யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,400.

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம் கொடுப்பனவு வழங்கப்படும்.)

(6) இடைக்காலக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 1,000.

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு ரூபா 255).

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 16,138.20 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால் நாளொன்றுக்கு ரூபா 537.94)

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன் றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(11) விசேட கொடுப்பனவு 20% அடிப்படைச் சம்பளத்தில்

(12) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும் துணைவிக்கும் பிள்ளைகளுக்கும்)

(13) உணவு விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின் மீளளிப்பு.

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்).

(16) திருமணமான அலுவலருக்கு மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(17) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் பைலற் ஆபீசர் இல் இருந்து குறுப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600 இலிருந்து ரூபா 4,250 வரை வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

(18) வரவுசெலவுத் திட்ட இடைக்காலக் கொடுப்பனவு ரூபா 10,000 மாதாந்தம்.

9. **ஓய்வூதியங்கள்/ பணிக்கொடைகள்**.- காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய அத்துடன் பணிக்கொடைகள் கோவையின் நியதிகளின்படி கொடுபடற்பாலனவாகும். எல்லா அலுவலர்களும் விதவைகள், அநாதைகள் (ஆயுதந் தாங்கிய படைகள்) ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துப வராவர். உதவுதொகை 1970 ஆம் ஆண்டின் விதவை, அநாதைகள் (ஆயுதந் தாங்கிய படைகள்) ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளபடியனவாகும்.

10. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக *தமது கையெழுத்தால்* நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் *2016,* யூலை 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் *"கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, தொழில்துறை பயிற்சிப் பாடசாலை, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட"* என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "பயிலிளவல் ஆண்/பெண் அலுவலர்களுக்கான விண்ணப்பம்– ............................ பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் தேதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/ குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/ சபையின்/ குடியியல்

தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் 'விடுவிக்கப்படுவர்' என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) தேர்வுநாடி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது அல்லது அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது பின்வருவனவற்றின் மூலப்பிரதிகளை காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் (கல்விச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(2) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்.

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்/தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்).

(4) இரு குணநலச் சான்றிதழ்கள். இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்வி கற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பக்காரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில் தருநரினதாக இருத்தல் வேண்டும்.

(5) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கெடுக்கப்படமாட்டா.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

11. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

12. **தேர்ந்தெடுத்தல், நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேற்கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் தேர்வுநாடிகளிலிருந்து பூர்வாங்கத் தெரிவுகள் செய்யப்படும். ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்படும் தேர்வுநாடிகள் வான்படை ஏவுநரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்படி தேவைப் படுத்தப்படுவார்கள். இதன் பின்னர் தெரிவுச் சபை ஒன்றினாலான நேர்முகப் பரீட்சையின் பின்னர் இறுதித் தெரிவு நடைபெறும்.

(ஆ) நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டா.

(இ) விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக் கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைகளைத் தொடர்ந்து பொருத்த மாகக்கூடியவரான தேர்வுநாடிகள் வான்படை மருத்துவச் சபைக்கு சமுகமளிக்கும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபாரிசு செய்ய விரும்பும் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) சேர்த்துக்கொள்வதற்குப் பொருத்தமற்றவராகக் காணப் படும் தேர்வுநாடிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டா.

ஜி. பி. புலத்சிங்ஹல,
எயர் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண் 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர வான்படை**

........................... பிரிவில் ஆண்/பெண் பயிலிளவல் அலுவலர் பதவி

1. தேசிய இனம் :----.

(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா, பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

2. முழுப்பெயர் (தேசிய ஆளடையாள அட்டைப்படி) :----.

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. நிரந்தர முகவரி :----.

5. தற்போதைய அஞ்சல் முகவரி :----.

6. பிறந்த திகதி :----.

வயது (2016, நவெம்பர் 15 ஆந் திகதியன்று) :-

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

7. உயரம் : ---- அடி, ---- அங்குலம்.

8. நிரந்தர முகவரிக்கு அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :----.

9. மாவட்டம் :----.

10. தேர்தற் தொகுதி :----.

11. கிராம அலுவலர் பிரிவு :----.

12. தொலைபேசி இலக்கம் :----.

13. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

14. பால் :----.

15. பாடசாலை பற்றிய விபரங்கள் :----.

16. பாடசாலை அத்துடன்/அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :----.

| பாடசாலை/ சர்வகலாசாலை பெயர்கள் | பரீட்சையின் தன்மை | ஆண்டு | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>வேறு | | |

17. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகிய திலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

18. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

19. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் : ----.

20. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் : ----.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

21. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

22. இதற்கு முன் ஆயுதப் படையில், தொண்டர் படையில், பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

23. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதன் பொருட்டு முன்பு விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப் பத்தின் பேற்றினையும் தருக :----.

24. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப் பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படி யாயின் விபரங்கள் தருக :----.

25. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத் தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக் கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

26. நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

27. **விண்ணப்பக்காரரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப் படுத்துகை-**

மேலே என்னால் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படைக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறைகளையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

28. **விண்ணப்பக்காரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடவேண்டிய வெளிப் படுத்துகை :**

(அ) இலங்கை வான்படையில் பயிலுநராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 26 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்ப மிடப்பட்டிருக்கும் ………….......……… என்பவருக்கு நான் பெற்றோர்/ பாதுகாவலர் ஆவேன்.

(ஆ) மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொறுப்பாளியாவேன் :-

(1) பயிற்சியின்போது ஆணைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கைக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கைக் குடியரசிற்கு திருப்பிக் கொடுப்பதற்கும்,

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாட்டுக் காரணங்களுக்காக ஆணை வழங்கப்படுவதற்குத் தகுதிபெற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கைக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும் உடன் படுகிறேன்.

----,
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

----,
முதலாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

----,
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

7-715

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### கல்வி அமைச்சின் 'செயற்றிட்ட உதவியாளர்' (முறைசாராக் கல்வி/ விஷேட கல்வி) பதவியில் உள்ளோருக்கான முதலாவது வினை திறன் தடைதாண்டல் பரீட்சை - 2015 (2016)

மேற்படி பதவிகளுக்குரிய உத்தியோகத்தர்களுக்கான உரிய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிகளுக்கமைய வினைதிறன் தடைதாண்டல் பரீட்சையொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் 2016, நவெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. (i) இப்பரீட்சை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதோடு பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும்.

(ii) பரீட்சை அபேட்சகத் தன்மை பெறுவதற்காக ஆக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் வேறாக அச்சிடப்பட்டுள்ளது. இந்த சட்டங்களை மீறினால் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

(iii) இந்தப் பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடிவது கல்வி அமைச்சின் கீழ் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே.

3. **பரீட்சைக் கட்டணம்**.- முதலாவது தடவையாக இந்த முழுப் பரீட்சைக்கும் அல்லது ஒரு பாடம் அல்லது பல பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பரீட்சைக்கட்டணம் அற்விடப்படமாட்டாது. அதன் பின்னரான தடவைகளில் ஒன்றுக்கு அதிகமான பாடங்களுக்கு அல்லது எல்லாப் பாடங்களுக்கும் தோற்றுவதாயின் ரூபா 400 பரீட்சைக் கட்டணமும் ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் ரூபா 200 பரீட்சைக் கட்டணமும் அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன் கீழ் அரசின் வருமானத்திற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த தபால்/ உப தபால் நிலையங்களிலும் பணமாகச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்ப்பட்ட மற்றுச்சீட்டை(அதன் ஒரு பக்கமாக) விண்ணபப்பப்படிவத்தின் குறித்த இடத்தில் கழறாது ஒட்டுதல் வேண்டும்.

(பற்றுச் சீட்டின் நிழற்பட பிரதியை தம்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனமாகும்)

**விண்ணபப்பப்படிவம்**.- விண்ணபப்பப்படிவம் இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும். இம்மாதிரி விண்ணபப்பப்படிவத்திற்கேற்ப ஏ4 அளவு கடதாசியொன்றில் தயாரிக்கப்பட வேண்டியதோடு தலைப்பு இலக்கம் 01 இல் இருந்து 06 வரை முதலாம் பக்கத்திற்கும் மீதி இரண்டாம் பக்கத்திற்கும் வரும் வகையில் தயாரித்தல் வேண்டும். விண்ணபப்பப்படிவம் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் பெயர் சிங்கள மொழிமூல விண்ணபப்பப்படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும். தமிழ் மொழிமூல விண்ணபப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் அவசியமாகும். விண்ணபப்பப்படிவத்தினை தட்டச்சு மூலம் தயாரித்துக்கொள்ள முடியுமாயினும் அதனை சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் (நிரப்புதல்) வேண்டும். அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணபப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளால் தமது வலய கல்விப் பணிப்பாளர்/ பீடாதிபதி/ திணைக்கள தலைவர் ஊடாக 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதிக்கு முன்பு கிடைக்குமாறு "உதவிச் செயலாளர் (தாபனம்), கல்வி அமைச்சு, 'இசுருபாய', பெலவத்த, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணபப்பப்படிவம் அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணபப்பப்படிவத்துடன் நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். பூரணமற்ற தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணபப்பப்படிவங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்துக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணபப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணபப்பப்படிவத்தின் நிழற்பட பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணபப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணபப்பப்படிவத்துக்கு இணைவானதா என்பது பற்றி விண்ணப்பதாரிகளால் கவனிக்கப்படல் வேண்டும். அவ்வாறில்லையெனில் விண்ணபப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

5. **பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம்**.- பரீட்சார்த்திகளால் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் சகல பாடங்களின் போதும் பரீட்சை மண்டப் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஏதாவது ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேலுள்ள ஆவணமொன்றை சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரிகளின் பரீட்சார்த்த தன்மை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீரமானமாகும்.

6. விண்ணபப்பப்படிவங்கள் அனுப்பியுள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீடசை நேர சூசியின் பிரதியொன்றுடன் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற உத்தியோகத்தர்களால் பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு அவர்களது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான அனுமதிப்பத்திரமின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட உடன் அதுதொடர்பாக குறிப்பிட்டு பத்திரகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நடைபெறும் தினத்துக்கு குறைந்தது 03 நாட்களுக்கு முன்னராவது தமது அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டபடி அதுபற்றி பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியினை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வதிவாராயின் அந்தத் தகவல்களுடன் பெக்ஸ் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திர பிரதியொன்றை துரிதமாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு வேண்டுதல் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனள்ளதாகும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் எந்த தகவலையும் உறுதிப்படுத்துவதற்காக தம்மிடம் வைத்துக்கொண்ட விண்ணபப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியிருப்பின் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணபப்பப்படிவத்தை தபாலிடும்போது பதிவு செய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை ஆயத்தமாக வைத்திருப்பது பயனளிக்கும்.

7. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் உள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றும் வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை லீவு வழங்கப்படுதல் வேண்டும். பயணக்கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

8. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரமே பரீட்சை நடைபெறும். அவற்றில் தாம் கல்வி கற்ற மொழியிலோ அரசகரும மொழியிலோ பரீட்சைக்குத் தோற்ற முடிவதோடு, தோற்றும் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலம் பின்னர் மாற்றம் செய்ய முடியாது.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரமே நடைபெறும்.

10. **பரீட்சை ஒழுங்குகள்**.- மேற்படி பதவிகளுக்கான பரீட்சை கீழ்வரும் பாடங்களை உள்ளடக்கியுள்ளது :

| விடயம் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| (1) பொது நிர்வாகம், அலுவலக முகாமைத்துவம் இலங்கை அரசியலமைப்பு சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளும் அரசின் ஏனைய பிரமாணங்களும் | 01 | 100 | 03 மணித்தியாலம் |
| (2) நிதிப் பிரமாணமும் கணக்குச் செயற்பாடுகளும் | 02 | 100 | 03 மணித்தியாலம் |
| (3) கல்வி, கல்விச் சட்டம், நிர்வாகமும் மேற்பார்வையும் | 03 | 100 | 03 மணித்தியாலம் |
| (4) ஆங்கில பயன்பாடு | 04 | 100 | 03 மணித்தியாலம் |

(1) பொது நிர்வாகம், அலுவலக முகாமைத்துவம், இலங்கை அரசியலமைப்பு சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளும் அரசின் ஏனைய பிரமாணங்களும் :

(அ) இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பு சட்டவாக்கத்தின் 13வது திருத்தத்துக்கு அதிக கவனம் செலுத்தி இலங்கையின் அரசியலமைப்பு சட்டவாக்கம் மற்றும் மாகாண சபைச் சட்டங்கள் (திருத்தங்களுடன்)

(ஆ) மாகாண சபையினால் திருத்தப்பட்ட கட்டளைச் சட்டம்

(இ) தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அலுவலக முகாமைத்துவம் அலுவலக முறைமை தாபனவிதிக்கோவையின் I, II, III, IV, V, VI, VII, VIII, IX, X, XI, XVI, XXV, XXVI, XXVII, XXIX, XXI, XXXII, XXXIII, XLVII, XLVIII ஆகிய வகுதிகள்.

(2) நிதிப்பிரமாணங்கள் மற்றும் கணக்குச் செயற்பாடுகள் :

(அ) அரசின் நிதிப்பிரமாணம் (பகுதி -1) (X வகுதி தவிர) ;

(ஆ) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சுக்கு அதிக அவதானத்தைச் செலுத்தி தற்போதைய ஆண்டின் வருமானம் மற்றும் செலவு மதிப்பீடு, அவற்றைத் தயாரித்தல், வருமானத் தலைப்பு நிதி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டம்) ;

(இ) மாகாண கல்வித் திணைக்களம், வலய கல்வி அலுவலகத்தினூடாக மேற்கொள்ளக்கூடிய சரியான கணக்கு நடவடிக்கைகளுக்கு உரியதான கட்டளைச்சட்டம் மற்றும் வேறு சட்டரீதியான ஏற்பாடுகளும், பிரமாணங்களும் ;

(ஈ) அரச திணைக்களங்களில் பயன்படுத்தப்படுகின்ற கணக்கு விடய நடவடிக்கைகள் ;

(உ) களஞ்சியசாலை சுற்றுநிருபம், கல்வி அமைச்சின் சுற்றுநிருபங்களில் நிதி மற்றும் கணக்கு பிரிவுகளுக்குரிய ஏற்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் அதிகாரம் வழங்கப்படும் ஏற்பாடுகளும் பிரமாணங்களும்.

(3) கல்வி, கல்விச் சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை :

(அ) பரீட்சார்த்திகள் கீழ்க்குறிப்பிடப்படும் சட்டங்கள் மற்றும் பாராளுமன்ற சட்டங்கள் பற்றிய அறிவு மற்றும் விளக்கம் பெற்றிருத்தல் வேண்டும் :

* 1939 இலக்கம் 31 கொண்ட கல்வி கட்டளைச் சட்டம்
* 1947 இலக்கம் 26 கொண்ட திருத்தப்பட்ட கல்வி கட்டளைச் சட்டம்
* 1951 இலக்கம் 05 கொண்ட திருத்தப்பட்ட சட்டம்
* 1953 இலக்கம் 43 கொண்ட திருத்தப்பட்ட சட்டம்
* அரச பாடசாலைகள் பற்றிய சட்டவாக்க கோவை
* 1960 இலக்கம் 05 கொண்ட உதவிபெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கலாசாலைகள் (விஷேட ஏற்பாட்டுச் சட்டம்)
* 1961 இலக்கம் 08 கொண்ட உதவிபெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கலாசாலைகள் (மேலதிக ஏற்பாட்டுச் சட்டம்)
* 1973 இலக்கம் 35 கொண்ட கல்வி (பதவிப் பெயர் மாற்றம் செய்யும்) சட்டம்
* 1976 இலக்கம் 15 இகாண்ட பகிரங்க பரீட்சை (திருத்தப்பட்ட) சட்டத்தில் திருத்தப்பட்ட 1968 இலக்கம் 25 கொண்ட பகிரங்க பரீட்சைச் சட்டம்
* 1979 இலக்கம் 64 கொண்ட பிரிவென் சட்டம் மற்றும் அதன்கீழ் வெளியிடப்பட்டுள்ள பிரமாணங்கள்.
* 1981 இலக்கம் 65 கொண்ட உதவிபெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கலாசாலைகள் (விஷேட ஏறிபாடுகள்) திருத்தப்பட்ட சட்டம்
* 1985 இலக்கம் 28 கொண்ட தேசிய கல்வி நிறுவக சட்டம்
* 1991 இலக்கம் 19 கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டம்
* 1997 இலக்கம் 32 கொண்ட தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபைச் சட்டம்
* கட்டாயக் கல்விப் பிரமாணம்
* சிறுவர் உரிமைகள் மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பாக ஆக்கப்படும் சட்டங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள சட்டங்களின் திருத்தம்
* குழந்தைகள் அதிகாரச் சபைச் சட்டம் மற்றும் படைச்சட்டம் தொடர்பாக

(ஆ) கல்வி நிர்வாகம்

* கல்வி அமைச்சின் கொள்கை
* மாகாண கல்வி திணைக்களம் உட்பட அமைச்சின் கீழ் உள்ள திணைக்களம் மற்றும் நிறுவனங்கள் மற்றும் கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்பு மற்றும் அலுவல்கள்
* தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் கல்வி சார் திட்டமிடல்
* குறிக்கோள் முறைமை (பாடசாலைத் திட்டமிடல் உட்பட) நடைமுறைப்படுத்தல் ஆகியன
* பாடசாலை முகாமைத்துவம் மற்றும் பாடசாலை சமூகத் தொடர்பு
* கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை
* விஷேட கல்வி வேலைத்திட்டங்கள்

(இ) கல்வி மேற்பார்வை

* பாடசாலை மேற்பார்வைக்கான முறை மற்றும் ஆசிரியர்களது செயலாற்றுகை மதிப்பீட்டுக்காக பயன்படுத்தப்படும் வரையறைகள் (தொழில் மீளாய்வு மற்றும் மீள் பயிற்சி வேலைத்திட்டங்கள்)
* பாடசாலைகளில் தொடர்ச்சியான மதிப்பீட்டு வேலைத்திட்டங்கள்
* பாடசாலைகளில் சுய மதிப்பீட்டு வேலைத்திட்டங்கள்
* மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலைகளை பேற்பார்வை செய்தல்.
* வெளிக்குழுக்களால் உள்ளக மதிப்பீட்டைப் பரீட்சித்தல்

(ஈ) முறைசாரா தொடர்ச்சியான மற்றும் விஷேட கல்வி நிர்வாக அபிவிருத்தி மற்றும் மேற்பார்வை (கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள, கைநூல்கள், வேறு வெளியீடுகள் பற்றி விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப்படும்.)

(4) ஆங்கில மொழிப் பாவனை :

* தொடர்பாடல் திறன்
* வியாபார கடிதங்கள்
* இரு மொழி
* விண்ணப்பப்படிவங்கள்
* நேர்முகப்பரீட்சை
* அறிக்கை
* எளிய பந்தியைக் கொடுத்து பொருள் விளங்கியுள்ளதா எனப் பார்ப்பதற்கான சுருக்க வினா

**(சித்தியொன்றைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தளவு புள்ளிகள் 40% வீதமோ அதற்கு அதிகமாகவோ உத்தியோகத்தரால் பெறப்படல் வேண்டும்.)**

11. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தகைமை பெற்றுள்ளார் எனக் கொள்ளலாகாது.

12. இந்த பரீட்சை அறிவித்தல் மூலம் வழங்கப்படாத எந்த் விடயம் தொடர்பாகவும் கல்வி அமைச்சுச் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

13. சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் வெளியிடப்படுகின்ற இதில் மொழிகளுக்கிடை யேயான பொருத்தப்பாடின்மை ஏதும் காணப்படின் சிங்கள மொழிமூல அறிவித்தலை சரியானதாகக் கொண்டு செயற்படுத்தல் வேண்டும்.

டப்ளியு. எம். பந்துசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு
'இசுருபாய'
பத்தரமுல்லை
2016, யூன் 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சின் "செயற்றிட்ட உதவியாளர்" (முறைசாராக் கல்வி/ விஷேட கல்வி) பதவியிலுள்ளோர்களுக்கான 1 ஆவது வினைதிறன் தடைதாண்டல் பரீட்சை - 2015 (2016)**

**The First Efficiency Bar Examination for "Project Assistant" (Non formal Education/Special Education) in the Ministry of Education -2015 (2016)**

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

1.2 பின்னுக்கு வரும் பெயரை முன்னாலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பின்னாலும் இட்டுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : GUNAWARDANA, H.M.S.K)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. சேவை நிலையமும் முகவரியும் :
2.1 சேவை நிலையத்தின் பெயர் :----.
2.2 அலுவலக முகவரி :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (இந்த முகவரிக்கு அனுமதிப்பத்திரம் தபாலிடப்படும்)

3. ஆண்/ பெண்
ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடுக.)

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

5. தற்பொழுது வகிக்கும் பதவி :----.
(நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இணைக்க.)

5.1 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.

5.2 நியமனத் திகதி :----.

6. நீர் தோற்றும் தடைதாண்டல் பரீட்சைக்கான பாடம்/ பாடங்கள் :
(வர்த்தமானி அறிவித்தலின் 10 வது பந்தியை பார்க்க.)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

7. பரீட்சைக் கட்டணம் (தேவையாயின் மாத்திரம்) :

(i) செலுத்திய பணம் : ரூபா.----.
(ii) பணம் செலுத்திய தபாற் காரியாலயம் :----.
(iii) பற்றுச்சீட்டின் இலக்கம் :----.

பற்றுச்சீட்டை அதன் ஒரு பக்கமாக இங்கு ஒட்டுக.
(தேவையாயின் மட்டும்)

பற்றுச் சீட்டின் நிழற்பிரதியொன்றை தம்மிடம் வைத்திருப்பது பயனளிக்கும்

மேற்குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானவை எனவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையேன் எனவும் வெளிப்படுத்துவதோடு இந்தப் பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஆக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் இணங்குகிறேன் என்பதை வெளிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அந்நிறுவனத் தலைவருக்கு பதிலாக ஒப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரின் முன்னிலையில் விண்ணப்பதாரியினால் கையொப்பம் இடப்படல் வேண்டும்.

**கையொப்பத்தை சான்றுப்படுத்தல்**

எனது அலுவலகத்தின்/ கல்லூரியின்/ கல்விக் கல்லூரியின்/ ஆசிரியர் கலாசாலையின்/ ஆசிரியர் மத்திய நிலையத்தின் உத்தியோகத்தர் ஒருவராகவும் நான் தனிப்பட்ட முறையில் அறியும் திரு./ திருமதி/ செல்வி ..................................... ஆந் திகதியில் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை சான்றுப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பமும் பதவிமுத்திரையும்
(அருகிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்).

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

(1) மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்களை பரீட்சித்துப் பார்த்தபடியும்
(2) நியமனக் கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்பட்டுள்ளது எனவும்
(3) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவர் எனவும்
(4) உத்தியோகத்தர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவது முதற் தடவை என்பதால் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்./ உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின்/ வலயக் கல்விப்
பணிப்பாளரின்/ பீடாதிபதியின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.
(தேவையற்றவைகளை வெட்டிவிடவும்.)

7-562

---

## அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையில் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2012 (II) (2014)

2013.12.11 ஆந் திகதிய 1840/ 34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 8, பந்தி 15 இனது ஏற்பாடுகள், இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இணைப்பு 5 இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2016, ஒற்றோபர் மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைப் பூர்த்திசெய்திராத ஆனால் அரசாங்க அலுவலகங்களில் பாவிக்கப்படும் (1) அலுவலக முறைமையும் நடைமுறைகளும், (2) கணக்கீட்டு முறைமைகள் என பெயர் குறிப்பிடப்படும் இப்பரீட்சையின் இரண்டு பாடங்களையுமோ அல்லது அவற்றில் ஒன்றையோ சித்தியெய்தி அல்லது விலக்களிப்புப் பெற்றுள்ள அலுவலர்கள் பாடத்துக்குப் பாட அடிப்படையில் இச்சேவைப்

பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் உரிய பாடங்களிலிருந்து விலக்களிப்புப் பெறல் வேண்டும்.

(ii) இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் அமுலாக்கத் திகதிக்கு முன்னர் தரம் II இற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள் பதவியுயர்வு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு (6) வருடங்கள் கடப்பதற்கு முன்னர் தரம் II இற்கு உரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினை சித்தியெய்துதல் வேண்டும்.

3. அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்காக இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்களுக்கு ஏற்புடையதான நகர இலக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. போதிய அளவிலான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காது இருப்பின் அல்லது வேறு ஏதேனும் காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச்செய்து பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்புப்படி அந்நிலையத்தைத் தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்திருக்கும். விண்ணப்பப்படிவத்தின் உரிய தலைப்பினை, இங்கு காட்டப்பட்டுள்ள நகர மற்றும் நகர இலக்கங்கள் குறிப்பிட்டுள்ள அட்டவணைக்கேற்ப பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பம் செய்துள்ள நகரம்/ நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 05 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| குருநாகல் | 18 |
| அனுராதபுரம் | 19 |
| பதுளை | 21 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

4. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக கடமைப்பட்டவராவர்.

(ii) பரீட்சார்த்திகளின் பொருட்டு விதித்துரைக்கப்பட்ட இவ் ஒழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்வொழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

5. **தகைமைகள்**.- அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் தரம் II இன் நியமனமொன்றைப் பெற்றுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெறுவர். தரம் II இற்கான பதவியுயர்வுத் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் இப்பரீட்சையினைச் சித்தியெய்த வேண்டும்.

**குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு சமமாக மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் உரிய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலும் மற்றைய நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் அவ்வவ் நிறுவனங்களினால் வெளியிடப்படும்.

''ஒவ்வொரு மாகாண அரச சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென பின்வரும் குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்பட வேண்டும். உரிய சேவை அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும்போது விண்ணப்பத் தலைப்பில் இவ்விலக்கங்கள் பதியப்படல் வேண்டும். இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10 ஆகும்''. இவ்விலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலது பக்க மேல் மூலையில் உங்களுக்குரிய சேவை எனும் இடத்தில் குறிப்பிடவும்.

6. விண்ணப்பம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2016, ஓகத்து மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ''பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

7. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி

இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

8. **விண்ணப்பங்கள்**.- (i) மாதிரி விண்ணப்பப்படிவத்தில் இல. 1 முதல் 5 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்தில் உள்ளடங்கும் வண்ணம் "ஏ4" அளவினதான ஒரு தாளில் விண்ணப்பத்தைத் தயார்செய்தல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் தயாரித்துக் கொள்ளப்படுமாயினும் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவமானது இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயார்செய்தல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பத்தை மட்டுமே அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி அனுப்பி வைத்தலாகாது என அறிவித்துக் கொள்ளப்படுகிறது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும். மேலும் பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

(ii) முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதன் பின்னரான அமர்வுகளின்போது அலுவலர்கள் ஒரே அமர்வில் முழுப் பரீட்சைக்குத் தோற்றுவதானால் ரூபா 400 உம், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 200 உம் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைத்தல் வேண்டுமென்பதுடன் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டிவிடுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணத்தை வேறேதேனும் ஒரு பரீட்சைக்காக மாற்றவும் முடியாது. முத்திரை மற்றும் காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும் அனுமதி அட்டையும் அனுப்பிவைக்கப் படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கிய வுடன், அது தொடர்பான அறிவிப்பொன்றை இலங்கை பரீட்சைத் திணைக்களம் பத்திரிகைகளில் வெளியிடும். அறிவிப்பு வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். தங்களிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருந்தால் உரிய பற்றுச்சீட்டு, உங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை மற்றும் பரீட்சையின் பெயரையும் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கொழும்புக்குப் புறம்பான பிரதேசமெனின் உங்களின் மேற்குறிப்பிட்ட விபரங்கள் மற்றும் பரீட்சை விண்ணப்பத்தின் பிரதியையும் தொலைநகல் மூலம் உங்களுக்கும் அனுப்ப ஏதுவாக உங்களின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டுள்ள கோரிக்கைக் கடிதமொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்துக்கு தொலைநகல் மூலம் அனுப்பி விசாரிப்பது அதிக பயனுள்ளதாகும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்திய அனுமதி அட்டை யைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்புதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குச் சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதலாகாது.

10. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக் கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

11. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் உரிய சேவைக்கான நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் சேர்ந்த அலுவலர்களும் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் இப்பரீட்சையில் தோற்றலாம். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

12. உத்தியோகத்தர்கள் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வெவ்வேறு தடவைகளிலும் தோற்றலாம். ஆயினும் சித்தியெய்துவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு அரசாங்க முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் இணைப்பு 5 ஐப் பார்க்கவும்.)

13. அரசகரும மொழிக் கொள்கையின் குறிக்கோள்களுக்கு அமைய சகல அலுவலர்களும் தமது விண்ணப்பங்களை அரசகரும மொழியில் தயார்படுத்த வேண்டுமென்பதுடன் அவற்றை அம்மொழியினாலே நிரப்பவும் வேண்டும்.

14. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளின் பெறுபேற்று அட்டவணை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத் தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படும். அத்துடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளது பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

15. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சார்த்திகள் கீழ்க்குறிப்பிடப்படும் பாடங்கள் உள்ளடங்கிய எழுத்துமூலப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும் :

| *பாடம்* | *காலம்* | *புள்ளி கள்* | *பாட இலக்கம்* |
|---|---|---|---|
| (01) அலுவலக முறைகளும் நடை முறையும் | 02 மணித்தி யாலங்கள் | 100 | 01 |
| (02) அரசாங்க அலுவல கங்களில் கையாளப் படும் கணக்கு முறைகள் | 02 மணித்தி யாலங்கள் | 100 | 02 |
| மொத்தம் : | | 200 | |

15.1 *அலுவலக முறைகளும் நடைமுறையும்*.- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைகள் தொடர்பான அறிவையும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள் (*காலம்* : 30 நிமிடம்)
- 25 புள்ளிகள்

பகுதி II - பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத்தாள் - 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (*காலம்* : 90 நிமிடம்)
- 75 புள்ளிகள்

15.2 *அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தும் கணக்கு முறைகள்*.- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தும் கணக்கு முறைகள், கணக்குப் பதிவேடுகள், அதனுடன் தொடர்புடையதாக வெளியிடப்பட்டுள்ள திறைசேரி நிதி ஆலோசனைகள் மற்றும் கட்டளைகள் தொடர்பான அறிவும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள் (*காலம்* : 30 நிமிடம்)
- 25 புள்ளிகள்

பகுதி II - பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத்தாள் - 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (*காலம்* : 90 நிமிடம்)
- 75 புள்ளிகள்

16. இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். இப்பரீட்சை அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடு காணப்படின் சிங்கள உரையே மேலோங்கும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2016, யூலை 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2012 (II) 2016**

Efficiency Bar Examination for Officers in Grade II of Public Management Assistants' Service – 2012 (II) 2016

(இப்பரீட்சை அறிவிப்பின்படி **இணைந்த சேவைகளில் உள்ள** அரச முகாமை உதவியாளர் சேவையின் தரம் II இன் அலுவலர்கள் மட்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.)

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| 1. | |
| 2. | |

வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 3 இன்படி தாங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தைக் குறிப்பிடவும். (பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

உங்களுக்குரிய சேவை : ☐

(இதைப் பூரணப்படுத்துவதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் பந்தியின் குறிப்பை நன்கு வாசிக்கவும்.)

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐

(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(*உதா* : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களை இறுதியிலிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :————.
*உதா* : (GUNAWARDHANA. H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :————.

2. சேவையாற்றும் இடமும் முகவரியும் :-

2.1 அலுவலக/ திணைக்கள/ நிறுவனப் பெயரும் முகவரியும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ————.

2.2 அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/ தமிழில்) : ————.

2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :————.

3. பால் :- ☐
பெண் — 1, ஆண் — 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. நீங்கள் தோற்ற உள்ள பாடம்/ பாடங்கள் :

| *பாடம்* | *பாட இலக்கம்* |
|---|---|
| | |
| | |

6. தற்போது வகிக்கும் பதவி :

6.1 பதவி :————.

6.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :————.

6.3 அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் II இற்கு நியமனம் பெற்ற திகதி :————.

7. 7.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா ? : ————.

7.2 முதன்முறையாக பரீட்சைக்குத் தோற்றாவிட்டால் செலுத்திய பரீட்சைக் கட்டணம் :————.

7.3 தபால் அலுவலகம் :————.

7.4 பற்றுச்சீட்டு இலக்கம் :————.

7.5 திகதி :————.

| பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டி விடவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.) |
|---|

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே காட்டப்பட்டுள்ள மொழி மூலமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும், நான் பரீட்சைக்கு .............................. முறையாகத் தோற்றுகின்றேன் என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும்/ ரூபா ............................. பரீட்சைக் கட்டணம் ...................... தபால் அலுவலகத்திற்கு .............................. ஆந் திகதி செலுத்திப் பெற்றுக்கொண்ட ..................... ஆம் இலக்க பற்றுச்சீட்டு மேலே ஒட்டப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும், பரீட்சைச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள எல்லா ஏற்பாடு களுக்கும் நான் உடன்படுகின்றேன் என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :————.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்தத் திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

திரு./ திருமதி/ செல்வி ..................................... எனது அலுவலகத்தில் சேவையாற்றும் அலுவலர் என்றும் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், ......................... .......... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும், அவர் முதன் முறையாக பரீட்சைக்குத் தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விடுவிக்க முடியும் என்றும்/ உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.
திகதி :————.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதென்றும்,

(ii) அலுவலர் இணைந்த சேவையில் உள்ளவர் என்றும்,

(iii) அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் தோற்றினார்/ தோற்றவில்லை* என்றும்,

(iv) அலுவலர் இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றி யிருப்பதனால் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ள பற்றுச்சீட்டு இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப் பட்டுள்ளதென்றும்,

(v) அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர் என்றும்

இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

* தேவையற்றவைகளை கீறிவிடவும்.

————————,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :—————.
பதவிப் பெயர் :—————.
முகவரி :—————.
திகதி :—————.

7-784

---

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை — 2015

**சட்ட விதிமுறைகள் :**

1. கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் இதற்கென அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

2. **பரீட்சை நிலையம்**.- நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரரின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். இருப்பினும் குறிப்பிட்ட ஒரு பரீட்சை நிலையத்தில் போதியளவு விண்ணப்பதாரர்கள் இல்லாவிடின் அப்பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அதற்குரிய விண்ணப்பதாரர்கள் அதற்கு அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்தில் மேற்படி பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்கள் மற்றும் நகரங்களடங்கிய பட்டியல் இணைப்பு I இல் தரப்பட்டுள்ளது.

3. **ஊடக மொழி**.- இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் மாத்திரம் நடைபெறும்.

4. **தகுதி**.- இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் கீழ்வருவன வற்றில் ஏதேனும் ஒரு தகைமையைப் பெற்றிருக்க வேண்டும் :-

4.1 மறைப் பாடசாலையொன்றில் பத்தாம் தரத்தில் சித்திபெற்று மறைப் பாடசாலையின் இறுதி சான்றிதழ் பத்திர வகுப்பில் ஒரு வருடம் கல்வி பயின்றிருத்தல் ;

4.2 தேசிய கல்விப் பொது சான்றிதழ்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்திபெற்றிருத்தல். அல்லது சிரேட்ட பாடசாலை சான்றுப்பத்திர பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்திபெற்றிருத்தல்.

4.3 அந்தந்த மறை மாவட்டத்தில் நடைபெறும் வருடாந்த மறைக்கல்வி பரீட்சையில் பதினோராந்தர வகுப்பில் சித்திபெற்றிருத்தல்.

**குறிப்பு**.- (I) இப்பரீட்சையில் தோற்றும் விண்ணப்பதாரர்கள் மேலே பந்தி 4 இல் கேட்கப்பட்டுள்ளதற்கேற்ப தகுதி பெற்றுள்ளார் என்பதை மறைக்கல்வி பாடசாலைப் பொறுப் பாசிரியர் அல்லது பங்குக் குருவானவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(II) விண்ணப்பதாரர் மறைப் பாடசாலை விண்ணப்பதாரராக மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

5. **விண்ணப்பித்தல் :**

5.1 கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்காக பரீட்சைத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து மறைப் பாடசாலைகளுக்கும் தேவையான விண்ணப் பப்படிவங்கள், அறிவுறுத்தல் பத்திரங்கள் உரிய காலத்தில் வழங்கப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்காவிட்டால் மறைப் பாடசாலையின் பெயர், முகவரி, விண்ணப்பதாரரின் எண்ணிக்கை ஆகிய விபரங்களை உள்ளடக்கிய கடிதம் மூலம் இவ்வறிவித்தலின் 5 : 6 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 2016.07.29 ஆந் திகதிக்கு முன் அறிவித்து விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5.2 விண்ணப்பதாரர் தனிப்பட்ட விண்ணப்பதாரராக பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார். ஆயினும், அறிவுறுத்தல் 4 இல் கேட்கப்பட்டுள்ள தகுதியிருப்பின் தமது வதிவிடத்துக்கண்மையிலுள்ள மறைப் பாடசாலையின் ஊடாக பரீட்சைக் கட்டணமாக 150 ரூபா செலுத்தி பரீட்சைக்குத்

தோற்ற விண்ணப்பிக்கலாம். இதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் சகல மறைப் பாடசாலைகளின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

5.3 மறைப் பாடசாலைப் பொறுப்பாசிரியரினால் முன்வைக்கப்படும் இவ்விண்ணப்பங்களின் இரண்டு பிரதிகள் தயாரிக்கப்பட்டு முதல் பிரதி பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டுமென்பதுடன் இரண்டாம் பிரதி மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் வசம் வைத்திருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் இரண்டிலும் மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

5.4 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2016.08.15 ஆந் திகதி ஆகும்.

5.5 விண்ணப்பங்கள் தெளிவாகவும், பிழையின்றியும் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு நாம் குறிப்பிட்ட கடைசித் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.6 மறைப் பாடசாலையின் கணினி இலக்கத்தையும், முகவரியையும் சரியாகக் குறிப்பிடப்பட்டிருப்பதோடு முகவரி மாற்றப்பட்டிருப்பின் அதை எமக்கு அறிவிக்க வேண்டும். தொலைபேசி வசதியிருப்பின் அதன் இலக்கத்தையும் குறிப்பிடுக. நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப் படமாட்டாது :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிப் பரீட்சை – 2015" என்பதையும் விண்ணப்பிக்கும் நகரத்தையும் குறிப்பிட வேண்டும். விண்ணபத்துடன் வேறெந்த சான்றிதழையும் இணைக்கத் தேவையில்லை.

5.7 விண்ணப்பதாரியின் சான்றிதழ் பற்றிய தகுதியை, விண்ணப்பதாரியை உறுதி செய்யும் மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் அல்லது பங்குத் தந்தை அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

5.8 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் எல்லாப் பரீட்சார்த்திகளினதும் விண்ணப்பப்படிவத்தில் பூரணப் படுத்தியுள்ள தகவல்களை தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பார்த்து கையொப்பமிட வேண்டும்.

5.9 விண்ணப்பதாரிகள் கையொப்பமிடாத, அழிக்கும் வெண்மை பயன்படுத்திய மற்றும் வேறு குறைபாடுகளுடன் கூடிய விண்ணப்பப்பத்திரங்களும், விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சைக் கட்டணம்.**- இப்பரீட்சைக்கான கட்டணம் 150 ரூபாவாகும். இருப்பினும், முதன் முதலில் தோற்றும் விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்த தேவையில்லை. நூன சித்தியைப் பூர்த்திசெய்ய வேண்டிய பாடத்திற்கான கட்டணம் 50 ரூபா ஆகும்.

6.1 *பரீட்சைக் கட்டணம் செலுத்தல்.*- விண்ணப்பதாரர் அனைவரினதும் பரீட்சைக் கட்டணத்தைப் பொறுப்பாசிரியர் ஒன்று சேர்த்து இலங்கையில் ஏதாவதொரு தபால் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு, அப்பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தின் பின்னால் ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை நீங்களும் வைத்திருப்பது நன்று (முத்திரை, காசுக்கட்டளை போன்றவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

6.2 *பரீட்சைக் கட்டணம் மீளப்பெறல்.*- எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவோ, மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

7. **அனுமதிப்பத்திரம்.**- பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால், விண்ணப்பித்த மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரூடாக அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்.

7.1 பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமது அனுமதிப்பத்திரத்தில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்தி பரீட்சைக்குத் தோற்றும் முதல் தடவையிலேயே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தமது அனுமதிப்பத்திரத்தைக் கொடுக்காவிட்டால் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தமக்கு அளிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தை விட்டு வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் அவரது பரீட்சார்த்தித் தகவு இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதிப்பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் மறைப் பாடசாலையின் பொறுப்பாசிரியரினால் அல்லது பங்குத் தந்தையினால் அல்லது அரச பாடசாலையொன்றின் அதிபரினால் அல்லது வருடமொன்றிற்கு 2,40,360 ரூபாவை விட கூடிய திரட்டுச் சம்பளத்தைப் பெறும் அரசின் நிரந்தர அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 7 நாட்களுக்கு முன் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடின் அந்த மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரினூடாக பரீட்சை

ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் கீழ்க்குறிப்பிட்ட விபரங்களை அறிவிக்க வேண்டும் :-

(1) பரீட்சையின் பெயர் ;
(2) மறைப் பாடசாலையின் பெயர் ;
(3) மறைப் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள கணினி இலக்கம் ;
(4) விண்ணப்பதாரியின் முழுப் பெயரும் முகவரியும் ;
(5) விண்ணப்பித்த பரீட்சை நிலையம்/ நகரம் ;
(6) விண்ணப்பப்பத்திரம் தபாலிடப்பட்ட தபாற் கந்தோர் ;
(7) விண்ணப்பம் பதிவுசெய்யப்பட்ட பதிவு எண்ணும் திகதியும் ;
(8) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பின் அந்தப் பற்றுச்சீட்டு இலக்கம், திகதி, தபால் அலுவலகம்.

8. **ஆள் அடையாளம்**.- ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மண்டப மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் பரீட்சார்த்திகள் தம்மை அடையாளப்படுத்தும் ஆவணத்தைச் சமர்ப்பிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றில் ஒன்றைப் பயன்படுத்தலாம் :-

8.1 தேசிய ஆள் அடையாள அட்டை ;
8.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
8.3 தபால் ஆள் அடையாள அட்டை.

9. **சித்திபெற்றமையைத் தீர்மானித்தலும், பெறுபேற்றை வெளியிடலும்**.- இத்தேர்வுக்கான வினாத்தாள்களின் எண்ணிக்கை நான்கு ஆகும். பரீட்சையில் சித்திபெறுவதற்கு பரீட்சார்த்தி நான்கு வினாத்தாள்களிலும் சித்திபெற வேண்டும். ஆயினும் இந்நான்கினுள் ஏதேனும் ஒரு பாடத்தில் மாத்திரம் சித்திபெறாவிடின் அது நூன சித்தியாகக் கருதப்படும். பரீட்சைக்குத் தோற்றிய வருடத்திலிருந்து தொடர்ந்து வரும் இரண்டு (02) வருடங்களுக்குள் அந்நூன சித்திபெற்ற பாடத்திற்கு மீண்டும் தோற்றி அதில் சித்திபெற வேண்டும். (இது 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.) நூன சித்தி பெறும் மாணவர்கள் அதனைப் பூர்த்திசெய்யும்போது அப்பாடத்திற்கு மட்டுமே தோற்ற வேண்டும்.

9.1 எல்லாப் பாடங்களின் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 100 புள்ளிகள் வழங்கப்படுவதுடன் சித்தி பெறும் தரங்களுக்குரிய புள்ளி இடைவெளி மற்றும் குறியீடு என்பன கீழே தரப்பட்டுள்ளது :

| *புள்ளி ஆயிடை* | *தரம்* | *குறியீடு* |
|---|---|---|
| 0-34 | சித்தியின்மை | F |
| 35-54 | சித்தி | S |
| 55-69 | திறமைச் சித்தி | C |
| 70-100 | விசேட சித்தி | D |

9.2 பரீட்சார்த்திகளின் பெறுபேற்று அட்டவணை அந்தந்த மறைப் பாடசாலைப் பொறுப்பாளருக்கு தபால் மூலம் அனுப்பப்படும்.

10. **சான்றிதழ் பத்திரம்**.- இத்தேர்வில் சித்திபெற்ற அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைத் திணைக் களத்தினால் சான்றிதழ் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

11. **விடைத்தாள் மீள் பரிசீலனை**.- **மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரின் வேண்டுகோளின்படி மாத்திரம்** விடைத்தாள்கள் பரிசீலனை செய்யப்படும். இத்திணைக்களத்தினால் வெளியிடப்படும் படிவத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம். இதற்காக அறவிடப்படும் கட்டணத் தொகை பற்றி அவ்வப்போது மாற்றம் செய்ய இடமுண்டு. அதுபற்றி விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படும். ஏற்கனவே வெளியிடப்பட்ட பெறுபேற்றில் ஏதும் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இப்பணம் மீளத்தரப் படும். எக்காரணத்தைக் கொண்டும் விண்ணப்பதாரருக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ விடைத்தாள்களைப் பரிசீலிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.

12. இச்சட்டதிட்டங்களுக்கும், பாடத்திட்டத்தில் காட்டப் பட்டுள்ள ஒழுங்கு முறைகளுக்கும் ஏற்ப செயற்படுவதற்கு அனைத்து விண்ணப்பதாரரும் கட்டுப்பட்டு இருப்பதோடு இந்த ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்காதோர் பற்றிய விடயத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப் படும் முடிவே இறுதியானதும் ஆகும்.

டபிள்யூ. எம். என். ஜே. புஷ்பகுமார,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூன்.

**கத்தோலிக்க மறை**

(2007 இல் இருந்து நடாத்தப்படும் பரீட்சைக்கான பாடத்திட்டம்)

*இத்தேர்வு ஒவ்வொரு வினாத்தாள்களும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட 4 வினாத்தாள்களை உள்ளடக்கியது.*

**வினாத்தாள் I**

கத்தோலிக்க விசுவாசம்

(அ) இவ்வினாத்தாள் திருத்தூதரது விசுவாச அறிக்கையின் ஆரம்ப கற்பித்தலை அடித்தளமாகக் கொண்டுள்ளது :

* படைத்தவர்
  - உலக ஆரம்பம்
  - படைப்பின் அழகு
  - படைப்பைப் பாதுகாத்தல் (தொ. நூ. 1, 2, 3)

* மீட்பர்
- இயேசுக்கிறிஸ்து (யோவான் 1 : 1-14)
- இறையரசு பற்றிய படிப்பினை (மத்தேயு 5, 6, 7)
- உவமைகள் (மத்தேயு 13 : 1-52)
- புதுமைகள் (யோவான் 11 : 38-45, லூக்கா 8 : 26-39, மாற்கு 2 : 1-12 மற்றும் 4 : 35-41)

* தூய ஆவியானவர்
- செயற்பாடுகள் (யோவான் 7 : 37-39, 14 : 15-31, 16 : 5-15, 1 கொரிந்தியர் 12 : 4-11)

* கத்தோலிக்க திருச்சபை
- ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்
- திருச்சபை கிறிஸ்துவின் சரீரமாக
  - ⇨ உரோமையர் 12 : 4-21
  - ⇨ 1 கொரிந்தியர் 12 : 12-31
- திருச்சபையின் ஆட்சித்திட்டம்
- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரம்கொண்ட பணி
- துறவற பணி
- பொதுநிலையினர் பணி

* மனித வாழ்வின் மாற்றம்
- மனிதனின் இறுதி நிகழ்வு
- புதிய வானமும் புதிய பூமியும் (திருவெளிப்பாடு 21 : 1-4)

## ***வினாத்தாள்*** II

கத்தோலிக்க வாழ்வுக்கான வழி

(ஆ) கத்தோலிக்க வாழ்வுக்கு வலிமை தரும் திருவழிபாடு

* திருப்பலியும் திருப்பலிச் சடங்கும்
* பாஸ்கா மறைபொருள்
* இறையருள்
* திருவருட்சாதனங்கள் (பொதுவான பண்பு)

● தொடக்க திருவருட் சாதனங்கள் :

⇨ திருமுழுக்கு
⇨ உறுதிப்பூசுதல்
⇨ திவ்விய நற்கருணை

● சுகத்தை வழங்கும் திருவருட்சாதனங்கள் :

⇨ ஒப்புரவு
⇨ நோயிற்பூசுதல்

● பணிக்காக ஏற்படுத்தப்பட்ட திருவருட்சாதனங்கள் :

⇨ குருத்துவம்
⇨ மெய்விவாகம்

## ***வினாத்தாள்*** III

கத்தோலிக்க நல்லொழுக்க வாழ்வு

(இ) கத்தோலிக்க நல்லொழுக்கம்

* பத்துக் கட்டளைகளும் அன்பின் கட்டளைகளும் - இரு பக்கங்கள்
* பத்துக் கட்டளைகளை நிறைவாக்கிய இயேசுக் கிறிஸ்து (மத்தேயு 5 : 21-47)
* சமவெளிப் பொழிவு (மலைப்பொழிவு) (லூக்கா 6 : 17-49)
* அறிவு, சுதந்திரமான விருப்பு, உணர்வுகள்
* இறை உறவின் பண்புகள்
* மனச்சாட்சி
* இறைவனை அன்பு செய்தல் (1-3 கட்டளைகள்)
* அயலவரை அன்பு செய்தல் (4-10 கட்டளைகள்)
* பத்துக் கட்டளைகளில் தோன்றவேண்டிய நற்பழக் கங்கள்
* கத்தோலிக்க தனித்துவ அடையாளம்

## ***வினாத்தாள்*** IV

செப வாழ்வு

(ஈ) இறையுறவை வளர்க்கும் செபம்

* பழைய ஏற்பாட்டில் செபம்
- ஆபிரகாம்
- மோசே

* புதிய ஏற்பாட்டில் செபம்
- கிறிஸ்து செபித்த விசேட சந்தர்ப்பங்கள்
- செபம் தொடர்பான விசேட படிப்பினைகள் (லூக்கா 11 : 1-13)

* திருச்சபை வாழ்வில் செபம்
- புகழ்தல்
- நன்றி கூறல்
- வேண்டுதல்
- பரிந்துரை செபங்கள்
- தியானத்தின் மூலம் செபித்தல்

* கிறிஸ்து கற்பித்த செபத்தில் (பரலோக மந்திரம்) வேண்டுதல்கள் ஏழு
- உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக
- உம்முடைய அரசு வருக
- உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூவுலகிலும் செய்யப்படுவதாக
- எங்கள் அனுதின உணவை எங்களுக்கு அன்றாடம் அளித்தருளும்
- எங்களுக்குத் தீமை செய்கின்றவர்களை நாங்கள் பொறுப்பதுபோல் எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்
- சோதனையில் எங்களை விழ விடாதேயும்
- தீமையில் இருந்து எங்களை இரட்சித்தருளும்

* பல்வித பக்தி முயற்சிகள்
- செபமாலை
- நவநாட்கள்
- திருமணித்தியாலம்

பயன்படுத்தக்கூடிய நூல்கள்

- புதிய கத்தோலிக்க திருமறை
- பெரிய குறிப்படம்
- திருவிவிலியம் (குறிப்பிட்ட பகுதிகள்)
- இரண்டாம் வத்திக்கான் சங்க,
  - ⇨ திருவழிபாடு
  - ⇨ இன்றைய உலகில் திருச்சபை
  - ⇨ கிறிஸ்துவின் திருச்சபை
  - ⇨ பொதுநிலையினரின் திருப்பணி

1. உப பிரிவுகள்

அந்தந்த மாவட்டங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள நகரங்களும் நகர எண்களும்

**மாவட்டம் 01 - கொழும்பு**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| பொரளை | 101 |
| களுஅக்கலை | 102 |
| பன்னிப்பிட்டி | 103 |
| மொறட்டுவை | 104 |

**மாவட்டம் 02 - கம்பஹா**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| நீர்கொழும்பு | 205 |
| கந்தானை | 206 |
| கம்பஹா | 207 |
| றாகம | 208 |

**மாவட்டம் 03 - களுத்துறை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| களுத்துறை | 309 |

**மாவட்டம் 04 - காலி**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| காலி | 410 |

**மாவட்டம் 05 - மாத்தறை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மாத்தறை | 511 |

**மாவட்டம் 06 - அம்பாந்தோட்டை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| அம்பாந்தோட்டை | 612 |

**மாவட்டம் 07 - இரத்தினபுரி**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| இரத்தினபுரி | 713 |

**மாவட்டம் 08 - கேகாலை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கேகாலை | 814 |

**மாவட்டம் 09 - புத்தளம்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| புத்தளம் | 915 |
| சிலாபம் | 916 |
| வென்னப்புவ | 917 |

**மாவட்டம் 10 - குருநாகல்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| குருநாகல் | 1018 |
| குளியாப்பிட்டி | 1019 |
| நிக்கவரட்டி | 1020 |

**மாவட்டம் 11 - கண்டி**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கண்டி | 1121 |

**மாவட்டம் 12 - மாத்தளை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மாத்தளை | 1222 |

**மாவட்டம் 13 - நுவரெலியா**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| தலவாக்கலை | 1323 |

**மாவட்டம் 14 - பதுளை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| பதுளை | 1424 |

**மாவட்டம் 15 - மொணறாகலை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மொணறாகலை | 1525 |

**மாவட்டம் 16 - அநுராதபுரம்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| அநுராதபுரம் | 1626 |

**மாவட்டம் 17 - பொலன்னறுவை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| ஹிங்குராக்கொடை | 1727 |

**மாவட்டம் 18 - திருகோணமலை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| திருகோணமலை | 1828 |

**மாவட்டம் 19 - மட்டக்களப்பு**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மட்டக்களப்பு | 1929 |

**மாவட்டம் 20 - அம்பாறை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| அம்பாறை | 2030 |
| கல்முனை | 2031 |

**மாவட்டம் 21 - யாழ்ப்பாணம்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2132 |
| மானிப்பாய் | 2133 |
| பருத்தித்துறை | 2134 |
| நெடுந்தீவு | 2135 |

**மாவட்டம் 22 - முல்லைத்தீவு**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கிளிநொச்சி | 2236 |
| முல்லைத்தீவு | 2237 |
| முழங்காவில் | 2238 |

**மாவட்டம் 23 - மன்னார்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மன்னார் | 2339 |
| முருங்கன் | 2340 |
| ஆண்டாங்குளம் | 2341 |
| பெரிய பண்டிவிரிச்சான் | 2342 |

**மாவட்டம் 24 - வவுனியா**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| வவுனியா | 2443 |

7-778

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.